## பாடம் - 2
## அசுத்தத்தின் வகைகள்

## الدرس الثانى
## أنواع النجاسة

**அசுத்தங்கள் பல வகைப்படும்.**
அ)மலம், ஜலம்.

ஆ)வதீ: இது சிறுநீருக்குப் பிறகு வெளியேறக் கூடிய வெண்மையான, கட்டியான (வெட்டை) நீராகும்.

இ)மதீ: இது பாலுணர்வு மேலிடும்போது வெளியேறக்கூடிய வெண்மையான, வளவளப்பான (வெட்டை) நீராகும். எனினும் இந்திரியம் சுத்தமானதே! ஆனால் அது ஈரமாக இருந்தால் கழுவுவதும் காய்ந்திருந்தால் சுரண்டி அகற்றுவதும் விரும்பத்தக்கதாகும்.

ஈ)எதன் இறைச்சியை உண்ண அனுமதி இல்லையோ அப்பிராணியின் சிறுநீர், விட்டை ஆகிய இரண்டும் அசுத்தமாகும். எதன் இறைச்சியை உண்ண அனுமதி உள்ளதோ அப்பிராணியின் சிறுநீரும் விட்டையும் அசுத்தமாகாது.

மேற்கூறப்பட்ட இந்த அசுத்தங்கள் ஆடையிலோ உடலிலோ பட்டுவிட்டால் அவற்றை நீக்குவதும் கழுவுவதும் அவசியமாகும்.

### அசுத்தத்தினுடைய சில சட்டங்கள்

**1.**ஒருவன் மீது ஒரு பொருள் பட்டுவிட்டால் அது அசுத்தமா? இல்லையா? என்று தெரியாவிட்டால் அது பற்றி யாரிடமும் கேட்க வேண்டிய அவசியமில்லை. அதுபோல அதைக் கழுவுவதும் அவசியமில்லை. ஏனெனில் எந்தப் பொருளாக இருந்தாலும் சட்டத்தின் அசல் நிலை தூய்மையானது என்பதே.

**2.**ஒருவன் தொழுது முடித்த பிறகு தன் உடலிலோ உடையிலோ அசுத்தத்தைப் பார்க்கிறான், அது அசுத்தம் என்று அவனுக்கு முன்னரே தெரியாம லிருந்தால் அல்லது தெரிந்தும் அதை மறந்துவிட்டால் அவனது தொழுகை நிறைவேறிவிடும்.

**3.**ஆடையில் அசுத்தம் பட்ட இடம் எதுவென்று ஒருவனுக்குத் தெரியாத போது அதைத் தெரிந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். அசுத்தம் பட்ட இடம் இதுவாகத் தான் இருக்கும் என்று அவனது சந்தேகம் பெரும்பாலும் எந்த இடத்தில் தோன்றுகிறதோ அந்த இடத்தைக் கழுவுவது அவசியமாகும். ஏனெனில் அசுத்தம் என்பது புலனுர்வுக்குட்பட்ட பொருளாகும். அதற்கு நிறம், ருசி அல்லது வாடை இருக்கும்.